[illegible]

O, IMSU, P
N45
172501

394

394

*Approved by the Text-Book Committee as suitable for school use.*

# பாப்பாப் பாட்டு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரால்

பாடப்பெற்றது.

18 FEB 1946



O-,1MSV,P
N45
172581

*ights reserved.)*

1945 [விலை 0—0—3

18 FEB 1946

# பாப்பாப் பாட்டு

க. ஓடி விளையாடு பாப்பா,—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா,—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

உ. சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா,
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

ந. கொத்தித் திரியு மந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடு மந்தக் காக்காய்—அதற்
கிரக்கப் படவே ணும் பாப்பா.

ச. பாலைப் பொழிந்து தரும், பாப்பா,—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைத்து வரும் நாய் தான்—அது
மனிதர்க்குத் தோழ னடி பாப்பா.

172509

௫. வண்டி யிழுக்கும் நல்ல குதிரை,—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு,—இவை
ஆதரிக்க வேணு மடி பாப்பா.

O7:lm8u,P
H45

௬. காலை யெழுந்த வுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

௭. பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

௮. பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

௯. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்து விட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

௰. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா,—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங் குழந்தை நொண்டி,—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

௧௧. தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா,—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

௧௨. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே,—
தொழுது படித்திடடி பாப்பா! [அதைத்
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—
தினமும் புகழ்ந்திடடி பாப்பா. [அதைத்

கங. வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா,
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

கச. வேதமுடைய திந்த நாடு,—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு,
சேத மில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா.

கரு. சாதிகள் இல்லையடி பாப்பா;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

கசு. உயிர்களிடத்தில் அன்பு வேணும்;—
தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா.

———

# பாரதியார் இயற்றிய

| | |
|---|---|
| முரசு ... | 0—0—6 |
| புதிய ஆத்திசூடி ... | 0—0—6 |

---

பாரதி விளக்கம்

ஸ்ரீ சுத்தானந்த பாரதி எழுதியது ... 0—7—0

பாரதியாரும் அவர் நூல்களும்

(BHARATI & HIS WORKS)

ஸ்ரீ ஸி. விசுவநாதன், பி. ஏ., எல். டி., யால்

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரிய நூல்

விலை அணா 0—4—0

பாரதி பிரசுராலயம்,

567, ஹைரோடு, திருவல்லிக்கேணி,

சென்னை.

18 FEB 1946
MADRAS

20A
15.30